# இடைக்கழி ஈசன் துதி.

## ( ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த தேஹளீகஸ்துதி )

### தமிழாக்கம் : பொய்கையடியான்.



தேகம் வளர்ந்து உலகையளந்த அந்த எம்பெருமான் ,
திருக்கோவலூர் எனும் திருத்தலம் தன்னில் இன்று ;
தேகளீஸனாகத் தம்மை நாடிவரும் அடியவர்களுக்கு ,
திருவருள் புரிபவன் அடியேனையும் காக்கவேண்டும் . 1.

தேகளீஸா, இத்தகய உன்தன் ஈஸ்வரத்தன்மையை ,
துதிக்க நினைப்பவர்க்கு தொண்டை தழுதழுக்கிறது ;
தேகம் உரச இடைக்கழியில் மூவர் வாயில் அந்தாதி ,
உதிக்கச்செய்தது, எனக்கும் ஆர்வம் உண்டாக்குகிறது . 2.

காலமென்பது உன்கை சக்கரம் போன்று சுழல்கிறது ,
தேவ,அசுரர்கள் அரம்போன்று தாழ்ந்து உயர்ந்திருக்க ;
சீலமிகுந்த சிலரேயுன்னை கோயில்களில் ஆராதித்து ,
தேவலோக ஐஸ்வர்யங்களைப் பெற்று மகிழ்கின்றனர் . 3.

சாற்றபட்ட அழகான மாலையுடைய உன்திண்தோள் ,
கிளைகளாக, திருவடியில் பழுத்தபயன்களையுடைய ;
ஏற்றமிகு மிருகண்டுமுனியின் ஆச்ரமத்தில் உலகமே ,
இளைப்பாறும்படி வளர்ந்த பச்சைமரமென திகழ்கின்றாய் . 4.

திருக்கரங்களில், கோவலூர்கோவலனாக விளங்கும்நீயும் ,
இடமாற்றியே சக்கரமும், சங்கமும் தரித்ததின் காரணம் ;
திருவாழி வலத்ததாயினும் அசுரர்க்கு வாமமேசிறந்தது ,
இடத்ததான சங்கம் தேவர்களுக்குஉகந்தது என்பதாலோ ! 5.

ஒருநாள் காலராத்ரியில் இடைக்கழியில் அன்போடு நீயும் ,
சத்வகுணத்துடன் அன்று ஏற்றிய ஞானசூரிய தீபத்தினால் ;
சிறு இதயகமலத்தில் அழகாக மறைந்திருக்கும் உன்தனை ,
தத்துவமறிந்த முதலாழ்வார்கள் கண்டு சேவித்தனரன்றோ ! 6.

பெண்ணை நதிக்கரையில் விளைந்தக் கட்டிக்கரும்பானவுனை ,
பொய்கையாழ்வார் உள்ளிட்ட மூவர் இடைக்கழியில் சந்தித்து ;
கண்ணிமைக்கும் நேரந்தனில் நெருக்கிடப் பிறந்த அந்தாதிகள் ,
மெய்யன்பர்க்கு மதுதாரையில் கலந்த சர்க்கரையானதன்றோ ! 7.

சிறுவுரு கொண்டு மன்னன் மகாபலியின் சபைக்குவந்த நீயும் ,
பெருவுரு கொண்டு உலகையெல்லாம் ஆக்ரமித்த வேளையில் ;
இருகாதுகளிலும் அழகிய மகரகுண்டலங்கள் அழகுற ஆடிட ,
இருமின்னல் கொடியோடிய நீலமேகம் உலகை மறைத்ததுவே ! 8.

பெரியத்திருவடிகளால் நீயும் மிகச்சிறிய இந்த உலகினை ,
அளந்து காட்டியது ஒரு பெரிய விஷயமாகவே இல்லை ;
சிறியதொரு வீட்டின் இடைக்கழியில் நீ, ஆழ்வார்களுடன் ,
வளைந்து உன் திருவுருவை அடக்கியதே ஆச்சர்யமானது ! 9.

பெரியதாக வளர்ந்த நீயும் இந்த உலகை அளந்த போது ,
மின்னும்தாரகைக்கூட்டம் உன்முடிக்கு முத்துபந்தலானது ;
சிறிது நேரம் கழித்து அவையாவும் மார்பில் ஆரமாகஆகி ,
பின்னும் அரைஞாணாகி முத்துத்தண்டையாக முடிந்தது ! 10.

பிச்சைவாங்கியுண்ணும் பிரம்மசாரி வடிவில் வந்தபோது ,
வடிவாய்நின் வலமார்பில் வாழும் மங்கையை திரையிட்டு ;
இச்சைதீர நீயும் வளர்ந்தபோது, அவளை மார்பினில் கண்ட ,
அடியவர்கள் உன்னை பரமனென்று உணர்ந்துகொண்டனரே ! 11.

தேகம் அன்று பெரியதாய் வளர்ந்து உலகையளந்த போது ,
எவர் நின்திருவடியைத் தீர்த்தத்தால்கழுவி பிரம்மனானதும் ;
தேகளீசா ! அந்தத் திருவடி தீர்த்தத்தை தன்னுடைய சிரசில்,
எவர் சேர்த்துகொள்வரோ அவர்கள் சிவனாவதும் பிரசித்தம் . 12,

பக்தர்களின் பாவத்தைப் போக்கிட நின்திருவடி என்கின்ற ,
கமலத்திலிருந்து பெருகியநீரில் மூழ்கியவர் நன்மைபெற்று ;
முக்தர்களாகவும் ஆக்கவல்லவளாக இருப்பவள், சிவனின் ,
கபாலத்தினின்றும் விழுகின்ற சிறந்த மாலையாகின்றாள் ! 13.

பத்தராவிப் பெருமாளே ! உன்தன் த்ரிவிக்ரம அவதாரத்தின் ,
வெற்றிக் கொடிகளான கங்கை, சிம்சுமார சக்ரம் ; சந்திரன் ;
பக்ததுருவன்; சூரியன்; மேரு; சிவன்; இமயம் இவைகளை ,
பற்றிக்கொண்டு ஊடுருவி வெகுவேகமாக ஓடி வருகின்றது . 14.

துதிப்ரியனே ! பிரம்மன் தனது கைக்கமண்டல நீரினை ,
வார்த்து பூஜித்த உன் கமல பாதங்களை நாள்தோறும் ;
நதிப்பெண்ணான பெண்ணையாறு அணுகி நனைப்பதால் ;
ஆர்த்துவரும் கங்கையைவிட கொண்டாட தக்கதாகிறது ! 15.



ஸ்ரீ புஷ்பவல்லி தாயார் சமேத ஸ்ரீ தேகளீச பெருமாள்.
திருக்கோவலூர்.

யதேச்சையானவுன் இத்திருவிக்ரம விளையாட்டினால் ,
திருவடிகளிலிருந்து மூன்று பிரவாகங்கள் தோன்றின ;
யதேச்சையாக சந்தித்துக்கொண்ட முதலாழ்வார்களிடம் ,
பெருகிய பாடல்கள் மூலகாரணமான உன்னையடைந்தன . 16.

இன்புறும் இவ்விளையாட்டுடையவனாய், நீ ஜீவர்களை ,
தேகத்துடன் பிணைத்து முக்தியடைவதைத்தடுத்து பின் ;
துன்புறும் ஜீவனை பக்தியினால் மகிழ்வித்து முக்திபெற ,
பாதநகத்தினால் கீண்டியோர் மார்கம் ஏற்படுத்தினாயோ ! 17.

மனத்திலுள்ள மலங்களை நீக்கிட உன்கருணையெனும் ,
கடலின் ஒருதிவலை எங்கள் மேல் பட்டாலே போதும் ;
கணத்திலது பக்தி அல்லது ப்ரபத்தி மார்கத்தில் எம்மை ,
கிடத்தி எங்களுடைய தாபத்தைத் தீர்கவல்லதாகின்றது . 18.

கூட்டிலிருந்து தவறிகீழே விழுந்த ஓர்கிளிப்பிள்ளையை ,
ஒரு அரசன் தன்கரங்களிலேந்தி விளையாடுவது போல் ;
வாட்டிடும் துன்பத்திலிருந்து எம்மைமீட்டு கையிலேந்தி ,
பெருங்கிருபையினால் த்ரிவிக்ரமனே நீகாத்திடவேண்டும் . 19.

விளையாட்டிற்காக கூண்டில் அடைபட்ட கிளி போன்று ,
பாவங்களின் பயனாக முக்குணங்களில் கட்டுண்டவனை ;
தளைகளை நீக்கி பரமபதத்தை அடைவதற்கு உண்டான ,
ஆவன செய்து பிராட்டியின் அன்பைப் பெருக்குவாயாக . 20.

பேய்க்காற்றை ஒத்த என் பாவங்களின் பெரும்பயனாக ,
என்மனதினில் எழும் ஆசையென்ற அலைகளால் தினம் ;
பேய்போன்று அலையும் என்தனை, அடியர்கள் விரும்பும்
உன்னையன்றி வேறு ஒருவராலும் காத்துவிட முடியாது ! 21.

தேகளீஸா ! செய்த பாவங்கள் நிறைந்து மேலும் மேலும் ,
தொடர்ந்து வருகின்ற, கல்லையும் கரையவைத்திடுமென் ;
சோக நிலைதனை நீரும் கண்டு, பின்பும் உன்தனுடைய ,
அடர்ந்த கருணையுள்ளம் எங்கனமதை பொறுத்திருக்கும் . 22.

மற்றவர்தாழ்ந்து நான் உயர வேண்டுமென்று நினைத்து ,
மோகக்கடலாகின்ற பெரும் பள்ளத்தினில் அடியேனும் ;
மற்றவர்கள் போன்று மீண்டும் மீண்டும் விழுகின்ற என் ,
தேகத்தை, நின் திருவடி பக்கலில் கட்டி நிறுத்துவாயாக ! 23.

சிறிதேனும் குறையாத பாபவாசனை உடையவனாயினும் ,
உன்தன் கருணையையே துணைகொண்டு பிராட்டிமுன்பு ;
சிறிதேனும் பயமின்றி உன்னிடம் விண்ணப்பிக்கின்றேன் ,
என்தனுக்கு எதுஇதமோ அதனை நீயே தந்தருள்வாயாக . 24.

அறிவற்றமை என்கின்ற இத்தகய சிறந்த குணமென்பது ,
சேய்போன்ற எனக்கு நீயாக கொடுத்த பெரும் செல்வம் ;
அறியாமல் செய்யும் பாவங்கள் அபாயமற்றதென்பதால் ,
தாய்போல் நீயேவுன் திருவடிக்கீழ் வைத்துக்கொண்டாய் . 25.

பரிகாரம் என்பதேயற்ற என்தன் கொடிய பாபங்களுக்கும் ,
பதிலளிக்கின்ற பெரும்தன்மை கொண்ட, மலர்ந்தவுன்தன் ;
சிரிப்புடன் கூடிய, கருணை நிறைந்ததான பார்வையினால் ,
பதிலளிப்பது என்மீதுள்ள உன் பரிவையேக் காட்டுகின்றது . 26.

ஆழ்வார்களில் முதல்மூவராலும் இத்தலத்தின் பெருமாள் ,
ஆழமாகப்பாடி பரவப்பெற்றவன் ! திருக்கையிலிருக்கும் ;
ஆழிப்பொறியை தோளில் ஒற்றிக்கொண்ட வைணவர்கள் ,
வாழவழி செய்பவன், இந்த உலகினையும் வாழ்விக்கட்டும் . 27.

வேதநெறி நன்கறிந்த இந்த வேங்கட குரு இயற்றியதும் ,
பரம்பொருளின் பெருமையைப்பற்றிச் சொன்னவையாவும் ;
ஓத, அவையெல்லாம் உண்மையாகியதுமான இந்தத்துதி ,
தரமிகுந்த பயனைத் தரும், சம்சார பந்தமும் நீங்குவதற்கு ! 28.

*****************************************************